# விழுப்புரம் நகராட்சி

2019–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ம் தேதி செவ்வாய்கிழமை காலை **10.45 மணிக்கு** விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற **“அவசர கூட்ட”** நடவடிக்கைகள்.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி.**

## 1761 மன்றப்பொருள்

விழுப்புரம் நகராட்சியானது ஸ்தல மற்றும் நகராட்சித்துறை அரசாணை எண்.**1194**, நாள்.**11.05.1919**–ன்படி, **01.10.1919**–ஆம் தேதியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண்.**265**, நாள்.**01.04.1953**–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசு குறிப்பாணையின்படி **01.04.1973**–லிருந்து முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயத்தப்பட்டு தற்போது நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.**15**, நாள்.**02.03.1988**–ன்படி **02.03.1988** முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு நாளது வரை தேர்வு நிலை நகராட்சியாகவே செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் **25.10.2011**–இல் விழுப்புரம் நகராட்சியுடன் சாலாமேடு, வழுதரெட்டி, எருமணந்தாங்கல், காகுப்பம் மற்றும் பானாம்பட்டு உள்ளிட்ட **5** ஊராட்சிகள் இணைக்கப்பட்டு **8.36** சதுர கி.மீ பரப்பளவிலிருந்து **33.13** சதுர கி.மீ பரப்பளவில் நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. **2011**–ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் மக்கள் தொகை **1,40,714** ஆகும்.

மேலும், தற்போது இந்நகராட்சியின் ஆண்டு வருவாய் ரூ.**3451.00** இலட்சமாக உயர்ந்துள்ளது. எனவே, பொது மக்களுக்கு அன்றாட தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், விரைவாக வளர்ந்துவரும் இந்நகராட்சியினை தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தினால், பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும் என்பதால், விழுப்புரம் நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு அரசுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க நகர்மன்ற தீர்மான எண்.**1679**, நாள்.**31–07–2109**–ல் மன்றம் ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து விழுப்புரம் நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# விழுப்புரம் நகராட்சி

2019–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.45 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற "**அவசர கூட்ட**" நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **சா.லட்சுமி, எம்.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## மன்றப்பொருள்

**1.** விழுப்புரம் நகராட்சியானது ஸ்தல மற்றும் நகராட்சித்துறை அரசாணை எண்.1194, நாள்.11.05.1919–ன்படி, 01.10.1919–ஆம் தேதியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண்.265, நாள்.01.04.1953–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசு குறிப்பாணையின்படி 01.04.1973–லிருந்து முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயத்தப்பட்டு தற்போது நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.15, நாள்.02.03.1988–ன்படி 02.03.1988 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு நாளது வரை தேர்வு நிலை நகராட்சியாகவே செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் 25.10.2011–இல் விழுப்புரம் நகராட்சியுடன் சாலாமேடு, வழுதரெட்டி, எருமணந்தாங்கல், காகுப்பம் மற்றும் பானாம்பட்டு உள்ளிட்ட 5 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு 8.36 சதுர கி.மீ பரப்பளவிலிருந்து 33.13 சதுர கி.மீ பரப்பளவில் நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. 2011–ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் மக்கள் தொகை 1,40,714 ஆகும்.

மேலும், தற்போது இந்நகராட்சியின் ஆண்டு வருவாய் ரூ.3451.00 இலட்சமாக உயர்ந்துள்ளது. எனவே, பொது மக்களுக்கு அன்றாட தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், விரைவாக வளர்ந்துவரும் இந்நகராட்சியினை தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தினால், பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும் என்பதால், விழுப்புரம் நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு அரசுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க நகர்மன்ற தீர்மான எண்.1679, நாள்.31–07–2109–ல் மன்றம் ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து விழுப்புரம் நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-V(2)) நாள்.30–08–2019–ன்படி 15.00 கோடிக்கு மேல் வருவாய் உள்ள நகராட்சிகளை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தலாம் என திருத்திய அளவுகோலின்படி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

புதிய அரசாணையின்படி இந்நகராட்சியின் வருவாய் கடந்த மூன்றாண்டுகளில் 2016–2017, 2017–2018, 2018–2019–ம் ஆண்டுகளில் 20 கோடிக்குமேல் வருவாய் உள்ள நகராட்சியாக இருப்பதால் மீளவும் விழுப்புரம் நகராட்சியினை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்திடக்கோரி திருத்திய பிரேரணை அரசுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-V(2)) நாள்.30–08–2019–ன்படி விழுப்புரம் நகராட்சியில் கடந்த மூன்றாண்டுகளில் 2016–2017, 2017–2018, 2018–2019–ம் ஆண்டுகளில் 20 கோடிக்குமேல் வருவாய் உள்ள நகராட்சியாக இருப்பதால் பொதுமக்களுக்கு அன்றாட அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஏதுவாக, விழுப்புரம் நகராட்சியை தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(10647/2012/சி1)